விடுதலை

சென்னை 28—2—50 செவ்வாய்க்கிழமை

தேர்தல் பட்ஜெட்

நிதி மந்திரி கோபால் ரெட்டியவர்கள் காங்கிரஸ் ஆட்சியின் தேர்தல் பட்ஜெட்டை நேற்று சமர்ப்பித்து விட்டார்!

"இப்போது நடைமுறையிலுள்ள வரிகளிலிருந்து விடுதலையளிக்காவிட்டாலும், புதியவரி எதுவும் விதிக்கப்படவில்லை," என்று நிதி மந்திரி தெரிவித்திருக்கிறார். சென்ற பட்ஜெட்டின் போது வாழைப் பழம் மஞ்சள் போன்ற பொருள்களின் வரி விதிப்பதற்காக முயன்றதும் பிறகு பொதுஜன எதிர்ப்பைக்கண்டு நடுங்கி, அம்முயற்சியைக் கைவிட்டதும் வாசகர்கள் அறிவார்களென்று நினைக்கிறோம். இந்த பட்ஜெட்டில் புது வரியைப் பற்றிய பேச்சே யில்லை. வரப்போகும் நிதியாண்டில் சுமார் 36 லட்சரூபாய் துண்டு விழக்கூடிய பட்ஜட்டைத் தயாரித்திருக்கிறார்.

மக்கள் எண்ணிக்கை பெருகப் பெருக செலவினங்கள் அதிகமாவது இயற்கைதான். மக்களின் தேவைகள் வளர வளர, சர்க்காரின் பொறுப்பும் வளரத்தான் செய்யும். அப்படியிருந்தும் புது நிதியாண்டில் புதுவரி எதுவும் விதிக்காமல் மிகக் குறைந்த தொகையாகிய 36 லட்சம் துண்டு விழும்படியான, வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தேன் என்றால் இந்த வித்தை அதிசயமானது தான்! பணம் பெருத்தவர்களிடமிருந்தும், பணத்தைப் பதுக்கி வைத்திருப்பவர்களிடமிருந்தும், வரிகள் மூலம் அதிகப் பணத்தைப் பெற்று, வசதியற்ற வறியோர்க்கு நன்மை செய்யக் கூடிய திட்டம் ஒன்று கூட இந்த பட்ஜெட்டில் இடையாது. பணம் பெருத்தவர் மீது புது வரிகளைச் சுமத்தினால் கூக்குரல் கிளம்பும். அவர்கள் ஆதரவில்லாவிட்டால் காங்கிரஸ் கட்சி நிலைத்திருக்க முடியாது. ஆதலால் தான இதை "தேர்தல் பட்ஜெட்" என்று குறிப்பிட்டோம். அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல் நடக்கலாம் என்று கூறப்படுவதனால் புது வரிகளைச் சுமத்திப் பணக்காரரின் விரோதத்தைத் தேடிக்கொள்ளக்கூடாது என்பதே ஆட்சியாளரின் முடிவாயிருக்கவேண்டும். புதுவரியே சுமத்தக்கூடாது, என்று மத்திய சர்க்கார் எல்லா மாகாணங்களுக்குமே இரகசிய சுற்றறிக்கை அனுப்பியிருந்தாலும் இருக்கலாம்!

இனி, சென்னை பட்ஜெட்டைப் பற்றிப் பொதுமக்கள் கவனிக்க வேண்டியது ஒன்றிருக்கிறது. சட்ட சபையில் பட்ஜெட் என்பது மக்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய முக்கியமான ஒருகூட்டமாகும். மக்கள் வாழ்க்கை விஷயத்தில் நமது சட்டசபை உறுப்பினர்களுக்கு எவ்வளவு கவலையும் பொறுப்பும் இருக்கிறது என்பதை உணரவேண்டுமானால் இதே, காணலாம்! நேற்றையக் கூட்டத்திற்கு வந்திருந்தவர் 120 பேர் தான். மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 214. பாதாமாதம் கண்டச்சபளம் வாங்குகிற, "நியமி"களுக்கு பட்ஜெட் கூட்டத்திற்கு வருவதற்குக் கூட நேரமில்லையென்றால், இவர்களா பொது மக்களின் பிரதிநிதிகள் என்று பொதுமக்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டுமோம். இவ்வளவு அலட்சிய புத்தியும், பிள்ளைத்தனமும் உடையவர்களின் கையில்தான் அப்பாவி மக்களின் வாழ்க்கை ஒப்படைக்கப் பட்டிருக்கிறது! மகா வெட்கக்கேடு!

இனி பட்ஜெட்டிலுள்ள இரண்டொரு முக்கிய விஷயத்தைக் கவனிப்போம்.

"இந்திய சர்க்காரிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட அநேக உதவி கடன் கிடைக்கவில்லை" என்று நிதிமந்திரி குறைபட்டிருக்கிறார். இதுமட்டுமல்ல மத்தியசர்க்காரின் கம்பி முகிடமான சீரமைப்புத் திட்டங்களைக் கைவிடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை பற்றியும் கண்ணீர் விட்டிருக்கிறார்!

"மத்திய சர்க்கார் தங்கள் கொள்கைகளைத் திடீரென்று அடிக்கடி மாற்றிக்கொண்டேயிருப்பதனால் மாகாண சர்க்கார்கள் தங்கள் திட்டங்களை நிறைவேற்றுவதில் எவ்வளவு திக்குமுக்காடவேண்டியிருக்கிறது என்பதை இந்திய சர்க்கார் உணர வேண்டும்",

என்று இந்திய சர்க்காருக்குப் பாடம் ஒரு சூடு கொடுத்திருக்கிறார்!

புதிய அரசியல் திட்டத்தில் மாகாணச் சர்க்காரின் பணப்பெட்டி மத்திய சர்க்கார் வசத்திலேயே இருக்கும். "குடிபரசு"த் தலைவர் அனுமதியில்லாமல் புது வரிகளை விதிக்கக் கூடாது என்ற விதி வகுக்கப் பட்டிருக்கிறது ஆதலால் போகப் போக மாகாணங்களின் நிலைமை மிக மிகப் பரிதாபத்திற்குரியதாகத்தானிருக்கும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

வரப்போகும் ஆண்டில் சீரமைப்புத் திட்டங்களுக்காகப் பெருந்தொகை ஒதுக்கப்படவில்லை. ஆனால் போலீசுக்கும் சிறை இலாகாவுக்கும் அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. "பொதுவாக அமைதியிலாததும், கம்யூனிஸ்டுகளின் அட்டகாசமும்", காரணம் என்று கூறுகிறார், நிதி மந்திரி 'சுதந்தரக் குடி ஆட்சி' என்று கூறப்படும் காந்திய அஹிம்சை ஆட்சியில் போலீசுக்கும் சிறைக்கும் மேலும் மேலும் அதிகப் பணம் ஒதுக்கப்படுவதன் தத்துவம் காங்கிரஸ்காரர்களுக்குத்தான் விளங்குமே தவிர மற்றவர்களுக்கு விளங்க முடியாது!

உதவாக்கரைக் கதர்த் திட்டம் இன்னும் கைவிடப்படவில்லை. பிரசார அபிவிருத்தித் திட்டமும் ஒழிக்கப்படவில்லை. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரசார அமைப்புக்களாக இருக்கும் இவைகள் எப்போதுதான் ஒழியுமோ தெரியவில்லை.

கட்டாய ஆரம்பக் கல்விக்குப் எந்தத் திட்டமும் வகுக்கப்படவில்லை.

வைத்தியத்திற்கும் சுகாதாரத்திற்கும் போதுமான பணம் ஒதுக்கப்படவில்லை.

உற்பத்தி தொழில்களைத் தேசியமயமாக்கும் திட்டமும் காணப்படவில்லை.

மொத்தத்தில் இது, உப்புசப்பற்ற உதவாக்கரை பட்ஜெட் என்றே கூறலாம். காலத்திற்கேற்ற, உலக மாற்றத்திற்கேற்ற, மனிதவளர்ச்சிக்கேற்ற—முறையில் பட்ஜெட்டைத் தயாரிக்காமல் பள்ளிச்சிறுவன் கணக்குப் போடுவதைப் போல, வெறும் கூட்டல் கழித்தல் பட்ஜெட்டைத் தயாரிப்பதற்கு இது தானா காலம்? நெருப்புப் போன்ற பட்ஜெட்டல்லவா இக்காலத்திற்குத் தேவை?

'வருமான வரியிலிருந்து இன்னும் அதிகமான பங்கு மத்திய சர்க்கார் கொடுத்து உதவினால் தான் சீரமைப்புத் திட்டங்களைக் கவனிக்க முடியும்', என்று முகாரி பாடி முடித்துவிட்டார், நிதி மந்திரி!

அதாவது, திராவிடசமுதாயத்தின் தனி நாடு கோரிக்கைக்கு மறைமுகமான ஆதரவு தந்திருக்கிறார் என்றே கூறலாம்.

....

தேர்தல் அவசரம்

சட்ட சபை தேர்தலை ஒத்திப்போட்டு இன்னும் 2, 3 வருஷ காலம் ஓட்டலாம் என்று கருதி வந்த காங்கிரஸ் தலைவர்கள் இப்போது மிக்க அவசரமாகத் தேர்தலை நடத்திவிடவேண்டும் என்று கவலைப்படுவதாகத் தெரியவருகிறது.

இதன் காரணம் என்னாச்சுது, நாள் செல்லச் செல்ல காங்கிரஸ் மீது, அதாவது காங்கிரஸ் ஆட்சி மீது மக்களுக்கு வெறுப்பும் விரோதமும் அதிகப்படுமே என்று அனுபவத்தைக்கொண்டுணருகிறார்கள். இந்தியா ஒரு "குடி அரசு நாடு" ஆகிவிட்டது என்பது பற்றி பிரசிடெண்ட் ராஜேந்திர பிரசாதைத் தவிர வேறு ஒருவருக்குமே ஒரு சிறு அளவு மகிழ்ச்சி கூட இல்லை. பட்டினி வேறு தகராறு ஒரு புறம் மாகாணம் தோறும் மக்களைப் பிரித்து வைக்கிறது. கம்யூனிஸ்டு தொல்லையால் சர்க்கார் கையாளும் சேலம் தமானது இன்னும் அதிகமாகக் கையாள வேண்டிய அளவுக்கு சர்க்கார் நிலைவந்து விட்டது. அதனால் பொது மக்களுக்கு காங்கிரஸ் ஆட்சி மீது இன்னும் அதிக வெறுப்பு ஏற்பட்டு விடும்.

தென்னாட்டில் அடுத்த தேர்தலுக்கு காங்கிரஸ் சார்பில் ஆட்களை நிறுத்துவது என்பது பெருத்த கலவரத்தில் வந்து காங்கிரஸ்காரர்களே காங்கிரசுக்கு விரோதமாய் நிற்கவும் வேலைசெய்யவும் ஆரம்பித்து விடுவார்கள் போல் தெரிய வருகிறது.

மாகாணந்தோறும் சட்ட சபைகளில் காங்கிரஸ்காரர்களுக்குள்ளாகவே கட்சிகள் வளர்கின்றன. பஞ்சம் பலப்படுகிறதே, ஒழிய குறையவில்லை சர்க்கார் சிப்பந்திகள், ஆசிரியர்கள், ரயில், தபால் சிப்பந்திகள் ஆகியவர்களுக்கும் சர்க்கார் மீது வெறுப்பு அதிகப்பட்டு வருகிறது.

இவ்வளவு இருப்பது மாத்திரமல்லாமல் இங்கிலாந்து தேர்தல் நெருக்குதலில் பிறரைக் கலக்கி விட்டது தொழில் கட்சி 150ஸ் தானங்களுக்கு மேற்பட்டு இழந்து ஒரு சிறு காற்றடித்தால் சாய்ந்து விடும்படியான அளவுக்கு பலமற்று இருக்கிறது.

அதன் எதிரொலி இந்தியத் தேர்தலை நடுங்கவைத்துவிட்டது.

காங்கிரஸ் தனக்கு சரியான ஒரு எதிரியோ, எதிர் ஸ்தானமோ இல்லை என்கின்ற காரணத்தால் அடுத்த தேர்தலில ஜெயிக்கலாம் என்று இருந்தாலும், இங்கிலாந்து தேர்தல்போல் "வடும்பு" ஓரளவில வாழும் வாழ்வாகத்தான் நெருக்கடியான, மஜாரிட்டியாக இருக்க முடியுமே என்று எல்லா காங்கிரஸ் மந்திரிகளும் அசைகிறார்கள். காங்கிரஸ் வெற்றி பெற்றாலும் இந்த பார்ப்பனர் எண்ணிக்கை முன்னையைவிட குறைந்துபோகும் என்பதோடு பார்ப்பனரல்லாதவர்களிலும் ஜெயிக்க காங்கிரஸ்காரர்களுக்குள் காமராஜ் சம்புகத்திற்கு பெரியவுச்சக் கடைக்காவலாளிகள் போல் தொல்லை ஏற்பட்டு விடுமோ என்று தலைவர்கள் கவலைப்படுகிறார்கள்.

மறு சர்க்கார், காங்கிரஸ் சர்க்காராகவே அமைந்தாலும் நிர்வாகம் சந்தி சிரிக்கும்படி ஆகிவிடும் என்பதோடு மதிப்பற்ற சர்க்காராகவே தான் இருக்கமுடியும் என்பது அரசியல் நிபுணர்கள் கருத்தாக இருக்கிறது.

இன்னமும் 2 அல்லது 3 வருஷத்தில் கம்யூனிச ஆட்சி வரலாம் என்று பல பொது அறிவாளிகள் கருதுகிறார்கள்.

கம்யூனிச கலவரங்களால் அதில் சாய்வதற்கு வெகு தொண்டர்கள், காங்கிரஸ் தொண்டர்கள் உள்பட பலர் மடி கட்டிக்கொண்டிருக்கிறார்கள்

ஆகையால் எப்படியாவது சீக்கிரம் எலக்ஷன்களை முடித்துவிடுவதுதான் விலகுவதானாலும் விரட்டப்படுவதானாலும் மரியாதையான பிரிவாக இருக்கும் என்று பண்டிதர் கருதுகிறார். வெளியில் இருப்பவரான ஆச்சாரியாருக்கும் இப்போது இந்த எண்ணம் தான் என்பதாகத் தெரிகிறது. அதுதான் அவர் இன்னமும் தனது நிலையைப்பற்றி ஒரு முடிவுக்கு வராமலிருக்கிறார் போல தெரிகிறது.

இனி காங்கிரஸ் ஆட்சி ஒழுங்காக (யோக்கியமாக) நடைபெறுவதற்கு யோக்கியமான ஆட்கள் இல்லை என்பது அவர் கருத்து. அதாவது 'நாமே யோக்கியராய் இருந்தால் யாரையும் அடக்கி ஆளலாம்' என்பது அவர் கருத்து. அந்த மாதிரி யோக்கியர் காங்கிரஸ்காரர்களிடமிருந்து, காந்தியார் அடியோடு எடுத்துக்கொண்டு போய்விட்டார் என்பதே அவர் கருத்தாகி விட்டது. ஆதலால் அவசரத்தில் தேர்தல் நடத்திப் பார்க்க நேரு முடிவு செய்துவிட்டார். இந்த முடிவால் யார் எக்கேடு கெட்டாலும் தேர்தலுக்கு ஆட்களை நிறுத்துபவர்களுக்கு பல லட்சக் கணக்கில் கொள்ளை லாபம் வரப்போவது மாத்திரம் உறுதி.

கோபால் ரெட்டியாரே, உஷார்!

★

"துன்பமுறவரினுஞ் செய்க
துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை" —குறள்

ரெட்டியாரவர்களே, உங்கள வேலைக்கு உலைவைத்துக் கொண்டீர்கள் வரவர ரொம்பக் கெட்டுப் போய்விட்டீர்கள! உங்களைப்போல துடுக்கான பிள்ளை இதுவரை மந்திரி கூட்டத்தில கண்டதில்லை.

ஒவ்வொருவருக்கு வந்த கதி உங்களுக்கும் வரத்தான் போகிறது. உங்கள் ராசத நீரம்! நெஞ்சு அதிகம் உரம்! இதெல்லாம் அபச்சாரம்! என்னமோ உம்மைக் "கடவுள்" தான காப்பாற்ற வேண்டும்! மனுஷனாலே முடியாது! ஏன் இப்படிச் சொல்லுகிறேன் என்றால, இராமசாமி ரெட்டியாரைக் காப்பாற்றக் "கடவுளாலேயே" முடியவில்லை.

உஷார்! உஷார்! என்று இரு முறை கூறுகிறேன். ஜாக்கிரதையாயிருங்கள்

நீங்களோ தெலுங்கர். உங்களுக்கு என்னத்திற்கு இந்த திருக்குறள் சங்கதி? இது "குறும்பு" தானே நேற்று சட்ட சபையில் பட்ஜட் நேரத்திலே முடிவுரையிலே,

'துன்பமுறவரினு செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை'

என்ற குறளை எடுத்துக்காட்டியிருக்கிறீர்! இதற்கு என்ன அருத்தம்?

"என்ன ஆபத்து வருவதானாலும் அஞ்சாமல், உனக்கு சரியென்றுபட்டதை நல்ல பலன் கொடுக்கும் காரியத்தை துணிச்சலோடு செய"

என்பது தான அந்தக் குறள் கருத்து? இந்தக் கருத்து ஓமந்தூர் இராமசாமி ரெட்டியாரைப் போன்றவர்களுக்கு சரியானதாகும். ஏன் என்றால் அவர் தனது மந்திரி வேலை போனாலும் சரி என்று முடிவுசெய்து கொண்டு அவருக்கு சரி என்றுபட்டதை செய்து விட்டார். அந்தப்படியே "ஒழிந்து" போய் விட்டார். நீங்கள் அந்த குறளைச் சொல்லுவது என்பதனால் நீங்களும் துணிந்து விட்டீர்களா?

உங்கள் சங்கதியைப் பார்த்தால துணிந்து விட்டதுபோல் தான் தெரிகிறது. அதுவும் இன்றல்ல, நேற்றல்ல. இந்த 2 வருஷத்துக்கு முன்பிருந்தே இந்த மாதிரி துணிச்சல் காரியம் செய்கிறீர்.

சில உதாரணம்

சுமார் ஒரு வருஷத்துக்கு முன் சர்க்கார் பஸ் சார்விசுக்கு சார்ஜ் (சத்தம்) உயர்த்தியபோது ரொம்ப ரொம்ப 'அதிகப் பிரசங்கித்தனமாக' பேசி துணிவு காட்டினீர்கள். சார்ஜ் உயர்த்தினாலும் பரவாயில்லை அப்போது என்ன சொன்னீர்கள்?

"இதுவரை பொது மக்களை ஏமாற்றிக்கொண்டிருந்த பார்ப்பனர்களுக்குத்தான் (அதாவது மயிலாப்பூர், மாம்பலம் (தியாகராயநகர்) வாசிகளுக்குத்தான் உயர்த்துகிறேனே ஒழிய மற்றவர்களுக்கு உயர்த்தவில்லை ஏழைகளுக்கு குறைத்திருக்கிறேன்" என்றீர்கள்.

நாட்டில வகுப்பு துவேஷத்தைக் கருப்புச் சட்டைக்காரர்கள் உண்டாக்குகிறார்கள் என்று சட்ட சபையில் சில பார்ப்பனர் கேட்ட கேள்விக்கு 'வகுப்பு துவேஷம் பார்ப்பனர்களினால தான் ஏற்படுகிறது,' என்று மரண நெரிபடச் சொன்னீர்கள்.

மற்றொரு சமயம் சட்ட சபையில "இப்படியெல்லாம் நடந்தால் மஞ்சள் பெட்டிக்கு ஓட்டு வராது ஒழிந்து போவீர்கள்" என்று ஒருவர் மிரட்டினதற்கு "கேட்டவரைப் பார்த்து நீர் என்று அலறுந்து பல்லை உதிர்த்த மாதிரி

"வேறே சிவப்பு பெட்டியை வைத்துக்கொண்டால் சரியாய்ப் போகிறது" என்று சொன்னீர்கள்.

சமீபத்தில் ஒரு பார்ப்பனர் கம்யூனல் ஜீ.ஓ. (வகுப்புவாரி பிரதிநிதித்துவ உத்திரவை) எடுத்துவிடவேண்டும் என்று கேட்டதற்கு வெட்டவெளிச்சமாக அறைந்தமாதிரி "அதை எடுக்க வேண்டும் என்று கேட்பதற்கு உமக்கு யோக்கியதை கிடையாது அது யாருடைய கலத்திற்கு என்று செய்யப்பட்டதோ அவர்கள் பார்த்து எடுக்கும்படி சொன்னால்தான் யோசிக்க முடியும்" என்று சொல்லிவிட்டீர்கள்

மற்றும் எத்தனையோ வருஷங்களாக, எத்தனையோ பாடுபட்டு ஆந்திரப் பார்ப்பனர் கொண்டுவந்த ஆந்திர மாகாணப் பிரிவினையை பார்ப்பனர்களே 'வேண்டாம் வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டு முட்டுக்கட்டை போட்டுவிட்டு ஒப்படியாக தந்திரம் செய்து, அதை வரைகரையான் உண்டாகின புறநிலை (ஓட்டமல்) பாம்பு போய் குடியிருப்பது போல் பார்ப்பனர் உண்டாக்கிய பிரிவினை சர்க்காரின் கீழ்நீங்கள் முதல மந்திரி ஆவதற்கு செய்த சூழ்ச்சியினால் அதை பாழாக்கி விட்டீர்கள்.

இப்படியே இன்னும் பார்ப்பனர் மனம் நோகும்படி பல பேச்சுப்பேசு வதோடு பல காரியமும் செய்து வருகிறீர்கள்

இப்போது சட்டசபையில் குறளை எடுத்துச் சொல்ல ஆரம்பித்துவிட்டீர்கள். அதுவும் ஒரு மனிதன் தன் ஆரம்பவதனை ஆணவத்தைக் காட்டும் (திராவிட வீரன் கைக்கொள்ள வேண்டிய) குறளைக் கூறிவிட்டீர்கள்.

அதாவது,

துன்ப முறவரினுஞ் செய்க,
துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை

என்ற குறளைக் கூறி இருக்கிறீர்கள். இதன் கருத்து என்ன?

உன இஷ்டப்படி நட, அதனால் அதனால் என்ன வந்தாலும் சரி— இஷ்டத்திற்கு சரி என்று பட்டதை அதுதான் நல்ல காரியம். நல்ல காரியம் என்று உன் மனம் ஒப்புக்கொள்ளுகிறதோ அது தான் இஷ்டம்.

ஆகவே, சரி என்றுபட்டதை துணிந்து செய் என்பது பெருமை. குறளின் பேரில் பார்ப்பனருக்கு இருக்கும் ஆத்திரம் நீங்கள் தெலுங்கரானதால் உங்களுக்குத் தெரியாது. பாரதம், ராமாயணமும், அதாவது கீதையும், இராமராஜ்யமும் தாண்டவமாடும் சபையில் குறள் என்றால் அதுவும் (தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

பதினைந்தாம் புலி!

"புலி வீடு" என்கிறார்கள் சில ஊர்களில். "பதினைந்தாம் புலி" என்கிறார்கள், வேறு சில ஊர்களில் 12 காய்கள்! மூன்று "புலிகள்!" முக்கோணத்தின் குறுக்கே கிழித்துப் பட்டை போல மூன்று கோடு போட்டு, விளையாடும் விளையாட்டு இது! தமிழ் நாட்டில் இராமநாதபுரப் பகுதிகளில் இந்த விளையாட்டுத் தெரியாத பெரியவர்களே இருக்கமாட்டார்கள். 'செஸ்' (Chess) விளையாட்டுக்கு வேண்டிய சிந்தனைக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாத சிந்தனை வேண்டும்! தமிழ்நாட்டு செஸ் என்றுகூடச் சொல்லலாம்!

இந்த 'பதினைந்தாம் புலி' விளையாட்டு சென்னை சட்டசபையில் தொடங்கியிருக்கிறதாம்! என்ன தான் செய்வார்கள், பாவம்!

இன்னும் ஒரு வருஷ காலத்துக்கு பொழுது போகவேண்டுமே! உப்புச் சப்பில்லாத பேச்சு! பொம்மலாட்டத்தில் பொம்மைகள் கை தூக்குகிற மாதிரியும், மயிலே கை காட்டி மரம் கை தூக்குகிற மாதிரியும், ஒரே இடத்திலிருந்துகொண்டு 'விசை'யை ஆட்டினால் ஒரே நேரத்தில் பலர் கை தூக்குதல்! இதெல்லாம் என்ன 'ருசி'யிருக்கும்?

'நல்ல வேலை செய்தார், பக்தவத்சலம்! 14 பேர்களைச் சேர்த்துக்கொண்டார்! தன்னைத் தலைவர் என்று சொல்லிக்கொண்டார்! சட்டசபையில் தனியிடம் கேட்டார்! எதிர்க் கட்சிக்குப் பக்கத்திலேயே அமர்ந்து விட்டார், பிரகாசம்! 15 பேர் கொண்ட புதுக் கட்சி!

இதிலொரு விசேஷம் என்னவென்றால், இந்தப் புதுக்கட்சி—'பதினைந்தாம் புலிக்கட்சி'—காங்கிரசுக்கு எதிர்க்கட்சி யல்லவாம்! ஆனால் அந்த வரிசையில் உட்கார முடியாதாம்!

பாவம்! எத்தனை காலத்துக்குத்தான் மெரினா தலைவர், பட்டாபி தலைவர், அவர் தலைவர், இவர் தலைவர் என்றே சொல்லிக் கொண்டிருப்பார்! இவரும் ஏன் தலைவராகக் கூடாது? ஆசையிருக்காதா என்ன? அதுவும் இந்தக் காலத்தில தலைவராவதென்றால் ரொம்பச் சுளுவான வேலை பச்சே! யாராவது ஒரு பத்துப்பேர்! மாலை போடவும், கைதட்டவும், ஜே போடவும்! உடனே ஒரு தனிக் கட்சி அமைப்பு! அதன் கொள்கையைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதேயில்லை. பொது மக்களை எப்படி ஏமாற்றலாம் என்பதற்கு ஏதாவது கொஞ்சம் கைச் சரக்குத் தேவை! அவ்வளவு தான்!

பிரகசத்தையே எடுத்துக்கொள்வோம். ஆந்திரமாகாணப் பிரிவினையாகட்டும், காங்கிரஸ் கொள்கையாகட்டும்; எதிலாவது இவர் புதிதாகச் சொல்லி வருவது ஏதேனுமிருக்கிறதா? அப்படியிருந்தும் ஒரு புதுக்கும்பலை ஏன் உற்பத்தி செய்திருக்கிறார்?

1. தலைமைப் பதவி
2. மந்திரி பதவி

இந்த இரண்டும் இவருக்கு வெகு அவசரமாகத் தேவை! எவ்வளவு காலந்தான் பொறுத்துக் கொண்டேயிருப்பார், பாவம்! அவரும் மனிதர்தானே! முற்றும் துறந்த முனிவரா என்ன?

ஒரே கொள்கை! ஆனால் புதுக் கும்பல்! உலக அதிசயங்களில் ஒன்று! ஆனால் இங்குதான் காண முடியும்!

புதுத் தலைவர் பிரகாசம் காருவுக்கு ஒரே ஒரு யோசனை! காங்கிரஸ் கொடியில் ஏதாவது ஒரு சிறு மாற்றம் செய்து கொண்டால் உங்கள் கூட்டத்திற்கென்று ஒரு புதுக்கொடி கூட இருக்கும்! அதிலொன்றும் தப்பில்லை! புது ஆட்களை இழுப்பதற்கு இதெல்லாம் இருந்தால் நல்லது! அதன் பிறகு இன்னொரு காரியம் செய்யவேண்டும். உம்மிடமிருக்கின்ற 14 பேர்களுக்கும் ஏதாவதொரு ஆசையைக்காட்டிக்கொண்டே இருக்கவேண்டும்! இல்லாவிட்டால் நீண்டநாளைக்கு ஒட்டியிருக்கமாட்டார்கள்! அவர்களும் மனிதர்கள்தானே, பாவம்!

பிரகாசமகாரு! வெளுத்துவாங்கும்! உம் புது முயற்சி வெற்றி பெறட்டும்! உம வகுசமரி பிரகாசிக்கட்டும்!

உம் மோர்ச்சி அற்பாயுளாகி விடாமலிருக்கட்டும்! ஆந்திரத்திராவிடன் எவனும் உம் சுபாலநதைக் கண்டு பிடிக்காமலிருக்கட்டும்! உம் போராட்டத்தைக் கண்டு உம் எதிரிகள் நடுங்கட்டும்!

உம் புதுவாழ்வு கொஞ்ச காலத்துக்காவது வெற்றி பெறட்டும்!

புத்தாண்டு வரவு செலவுத் திட்டம்

வரிச்சுமை குறைய வழி காணோம்

உணவுக்கு டெல்லி மூலவரிடம் கையேந்தப்படும்

சென்னை பிப் 28—

நேற்று சென்னை சட்டசபையில் நிதி அமைச்சர் தோழர் பி கோபால் ரெட்டி 1950-51-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். எற்கனவே விதிக்கப்பட்டிருக்கும் வரி உடனடியாகக் குறைக்கப்படும் என்றோ அல்லது ரத்து செய்யப்படும் என்றோ குறிப்பிடப்படவில்லை. புது வரிகள் இல்லை என்று திருப்திகொள்ளவேண்டும் என்று கூறிக்கொண்டார்.

ரெவின்யூ கணக்கில் ரூ. 36 லட்சம் துண்டு விழுகிறது. பங்கனப்பள்ளி, சாண்டூர், புதுக்கோட்டை ஆகியவைகள் இணைக்கப்பட்டதால் ஏற்பட்ட அதிக செலவினால் இந்தத் துண்டு விழுகிறதென்றும், மத்திய சர்க்கார் ஈடுத்தொகை தந்தால் இதையும் சரிக்கட்டி விடலாம் என்றும் குறிப்பிட்டார்.

புது அரசியல் அமைப்பில் சமர்ப்பிக்கப்படும் முதல் வரவு செலவுத் திட்டம் இதுதான்.

தோழர் கோபால் ரெட்டி தமது வரவு செலவு திட்ட சொற்பொழிவை,

"துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி இன்பம் பயக்கும் வினை"

என்ற திருக்குறள் மேற்கோளுடன் முடித்துக்கொண்டார்.

1950-51—வரவு செலவு திட்டத்தில்

கல்வி	9 5 08	லட்சம்
மருத்துவ வசதி	283 57	,,
சுகாதாரம்	97 67	,,
நீர்ப்பாசனம்	712 43	,,
விவசாயம்	187·99	,,
கால்நடை மருத்துவம்	47 15	,,
கூட்டுறவு	79 16	,,
கைத்தொழில்	207·76	,,
ஆக.	2610·81	

வரவு செலவுத் திட்டம்

1949—50 திருத்தப் பட்ட மதிப்பு	1950—51 பட்ஜெட் மதிப்பு
வரவு	
ரூ. 56,91,30,000	ரூ. 55,21,25,000
செலவு	
ரூ. 56,38,17,000	ரூ. 55,57,23,000
+ ரூ. 53,13,000	— ரூ. 3,598,000

உணவு நெருக்கடி

உணவு நெருக்கடி பற்றி சர்க்கார் நன்கு அறிந்திருக்கின்றனர் என்றும், போதிய உணவு உதவி அனுப்பும்படி இந்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்தும் என்றும் நிதி அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆள் குறைப்பு இல்லை

ஆட்களைக் குறைத்து சிக்கனம் செய்ய சர்க்கார் தனி திட்டம் எதுவும் [illegible]

[illegible]

115 கோடி அதாவது மொத்த வருமானத்தில் 20 சதத்திற்கு மேலாகிறது.

உணவு அபிவிருத்தி பசனத்திட்டங்களுக்காக ஸ்தல ஸ்தாபனங்களுக்கு அதிக மான்யமளிக்கப்படுகிறது. அதிக உணவு உற்பத்தித் திட்டங்கள் வகைக்காக ரூ 145 லட்சம் செலவிடப்படும்.

இனாம் மான்யமளிப்பு ரூ 152 லட்சம்.

ஜமீன்தாரிகளுக்கு ஈடு பணமாக அளிக்க இவ்வரவு செலவுத் திட்டத்தில் ரூ 107 லட்சம் ஒதுக்கப்பட்டுளது.

வீடு கட்டும் கடன் வகைக்கு ரூ 140 லட்சம் தரப்படும். இதில் கிராமங்களுக்கு ரூ 20 லட்சம்.

பிற்பகல் மேல் சபையிலும் வரவு செலவுத் திட்டம் ஒப்புவிக்கப்பட்டது. மார்ச் 6-ந் தேதி விவாதம் துவங்கி நான்கு நாட்கள் நடக்கும்.

கீழ்ச் சட்டசபையில் மார்ச் 1 முதல் 4-ம் தேதிவரை விவாதம் நடக்கும். மே 10 முதல் 25 வரை நடக்குங் கூட்டத்தில் வாக்கெடுப்புச் சடங்கு நடக்கும். 1949-50 திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டமும் 1950-51 வரவு செலவுத் திட்டமும் மேற்ற சபையில் ஒப்புவிக்கப்பட்டது.

நிதிமந்திரி தமது பேச்சில் குறிப்பிட்டதாவது:

நாணய மதிப்புக் குறைவால் விலைவாசி ஏறிவிடாது மத்திய சர்க்கார் கவனம் செலுத்திவருகின்றனர். ஏற்றுமதி அதிகரிக்க வெளிநாட்டு நாணய வசதி செய்யவும் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டது. வருமான வரியிலிருந்து அதிகம் கிடைத்ததால் மற்ற சில வரிகளை வசூலிட்டு வகை ஏற்பட்டது. புகையிலை வரி வகையிலிருந்து 2½ லட்சத்திற்குப் பதிலாக 56 லட்சம் மத்திய சர்க்கார் தர இணங்கியிருக்கிறது. வருமான வரிப்பங்கு எதிர்பார்த்ததைவிட ரூ 31 லட்சம் அதிகம் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

பருவமழைத் தவறியதால் நிலவரி வசூல் வகைபோக திருத்தப்பட்ட கணக்குப்படி மொத்தம் வருமானம் ரூ 5691 லட்சம். வரவு செலவுத் திட்டத் தொகையைவிட ரூ 116 லட்சம் அதிகம். செலவினத்திலும் ரூ. 2 லட்சம் அதிகரித்திருக்கிறது. இவ்வண்டின மொத்தம் உபரி ரூ 53 லட்சம் மூலதனச் செலவு வகைக்காக கேட்ட கடனை மத்திய சர்க்கார் மறுத்துவிட்டது.

இந்த மாகாணத்திற்குப் பெரிய வருவாயாக விருந்த விற்பனை வரி புதிய அரசியலால் பாதிக்கப்பட்டு விட்டது கண்டு வருந்துகிறேன்.

[illegible]

இந்து மதம்

★

இந்து மதம் என்பதாக ஒரு மதம் இல்லை என்றும் அது பார்ப்பனர்கள் உயர்வுக்கும் வயிற்றுப் பிழைப்புக்குமாக மூடர்களுக்கு ஏற்ற விதமாக பொய்யையும் புளுகையும் எழுதி வைத்து அதையே மதம் என்றும், வேதம் என்றும், சாஸ்திரம் என்றும் பெயர் வைத்து நமயில் சில பேதைகளை [illegible] அறிவிலிகளையும் இழிந்த தன்மையால் சுவாதீனம் செய்து அவர்களைக் கொண்டே அதைப் பிரசாரமும் செய்விக்கச் செய்து, அதையே கலைபாகவும், கவியாகவும் செய்துவிட்டார்கள் என்றும், அதனால் இப்போது அவைகள் எங்கு பார்த்தாலும் வயிற்றுப் பிழைப்புக்காரர்களுக்கும், சோம்பேறிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும், தொழிலாகவும் லாபமாகவும் ஏற்பட்டுவிட்டது என்றும் இதன் பலனாக நாட்டில் உள்ள மக்கள் பெரும்பாலும் அறிவிழந்து மானமிழந்து சரணம் பற்று [illegible] படியாகவும் ஏற்பட்டு விட்டது என்றும் பலதடவை எழுதியிருக்கிறோம்.

அப்படியிருந்தும் இம்மாதிரி இந்து மதத்தைப் பற்றி [illegible] பேசும் எந்த யோக்கியரும் இந்து மதம் என்றால் என்ன? அதன் தலைவர் யார்? அதன் ஆதாரம் எது? அது எப்போது ஏற்பட்டது? — என்பன போன்றவைகளை இதுவரை வெளியிட வந்தவர்கள் அல்ல. இந்து மதம் போச்சு! இந்து மதம் போச்சு!! என்று மாயாஜாலம் செய்யும் அறிவிலிகள் [illegible] மற்ற மதங்கள் என்பவைகளுக்கு பொருள் சொல்லப்படுவது போல இந்து மதம் என்பதற்கு பொருள் [illegible]

பல யோக்கியர்கள் எழுதியும் உளறியும் திரிகின்றார்கள். அதை கவனிக்கும் போது நாம் கடிந்து சொல்லாமல் இருக்க முடியவில்லை. ஏனெனில் நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்வதாக எழுதுகிறவர்களும் கூறுகின்றவர்களும் நாஸ்திகம் என்றால் என்ன என்பதைப் பற்றியும், அதனால் ஏற்பட்ட கெடுதி என்ன என்பதைப் பற்றியும் சொல்ல முன்வந்து பிறகு அக்குற்றத்தை நம் மீது சுமத்தினால் அதை மனிதத் தன்மையாகச் சொல்லலாம். அப்படிக்கின்றி நாஸ்திகம் இன்னது என்றே அறிவிக்காமல் மூடஜனங்களுக்கு நாஸ்திகம் என்கிற வார்த்தையில் ஒரு சிவெறுப்பு இருப்பதாக உணர்ந்து அதை உபயோகித்துக் கொள்வதன் மூலம் நம் மீது அம்மக்களுக்கு துவேஷம் உண்டாகட்டும் என்கின்ற அயோக்கியத்தனமான எண்ணத்துடன் பலர் அடிக்கடி எழுதினால் யார்தான் சும்மா இருந்து கொண்டிருக்க முடியும் என்று நாம் கேட்கின்றோம்.

நாம் ஏதோ இவ்விஷயத்தில் சற்று கடினமான பதம் உபயோகிப்பதாக வாசகர்கள் கருதலாம். என் செய்வது? கீர்த்தி இல்லாததால் உபயோகித்தே தீரவேண்டியதாயிற்று என்பதை நமது வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகின்றோம். ஏனெனில் இதைப்பற்றி பல தடவைகளில் நாம் சமாதானம் எழுதி இருக்கின்றோம். அவை கொஞ்சமும் அவ்விஷயங்களுக்குப் பயன்படியாகச் செய்ய முடியவில்லை. மறுபடியும் நாஸ்திகம் என்றும் சிலைதைத் திட்டினான் என்றும், மற்றதைத் திட்டினான் [illegible]

[illegible]

பேர்னாட் ஷா வைத்தியமாகிறார்

[illegible]

தஞ்சை மாவட்டத்தில் திராவிடர் கழக பிரச்சாரம்

[illegible]

பஞ்சாப் படுகொலையினும் கொடிய நிகழ்ச்சிகள்-வெள்ளையன் ஆட்சியைவிடக் கேடு தரும் முறைகள்

:(0):

காங்கிரசார் ஆட்சி அகலும் நாளே நன்னாள்

திருவண்ணாமலை மோட்டார் தொழிலாளர் பொதுக்கூட்டத்தில் முழக்கம்

திருவண்ணாமலை, பிப். 26—

23—2—50 மாலை 6 மணிக்கு திருவண்ணாமலை மோட்டார் தொழிலாளர் யூனியன் ஆதரவில் இவ்வூர் பெரிய கோபுரத்தின் முன் மைதானத்தில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சேலம் மோட்டார் தொழிலாளர் யூனியன் தலைவர் தோழர் வி. எஸ். மணி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுசமயம் சென்னை மாகாண மோட்டார் தொழிலாளர் பெடரேஷன் தலைவர் தோழர் எம் சித்தாராமன் புதிய காங்கிரஸ் ஆட்சியில் தொழிலாளர் நிலை என்பது பற்றிப் பேசினார். அவர் சொற்பொழிவில் நம் தேசத்தின் தகுதிக்கொப்ப மோட்டார் ஓட்டிகளுக்குப் பயிற்சி கற்பிக்கவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

அடுத்தபடியாக பரமக்குடி மோட்டார் தொழிலாளர் யூனியன் தலைவர் தோழர் பங்கஜத்தம்மாள் ஒரு மணிநேரத்திற்கு மேல் சொற்பொழிவு நிகழ்த்தினார். அவ்வம்மையார் பேசிய கருத்தாவது:—நம்மவர்கள் வீட்டு மனைவி [illegible]

படி ரூ. 12½ போகவர முதல் வகுப்பு சீட்டு டிரைவர் 24 மணி நேரமும் வண்டியை ஓட்டி, கழுவி, சரி போட்டு சுற்றி வண்டி நின்றால் தள்ளி கஷ்டப்படுபவர்களுக்கு கொடுத்தபடி போதுமாம். [illegible]

[illegible]

மறைவு

[illegible]

நடக்க இருப்பவை

வேலூர்:— 1—3—50 புதன்கிழமை மாலை 3 மணிக்கு தோழர் டி. ராசையா பங்களாவில் முன்னாள் தலைவர் தோழர் ஆர். வி. ராசன் தலைமையில் வேலூர் வட்டார திராவிடர் கழக மாநாடு நடத்தவும் வரவேற்பு குழு அமைக்கவும் ஆரம்பக் கூட்டம் நடைபெறும்.

• • •

சென்னை.— சித்தவைத்திய சங்க ஆதரவில் 1-3-50 புதன்கிழமை மாலை 6 மணிக்கு சென்னை ராயப்பேட்டை நகராண்மை ஆண் பாடசாலையில் திருக்குறள் மருத்துவ மகத்துவத்தைப்பற்றி க. விசுவலிங்கன் அவர்கள் பேசுவார்கள்.

வானொலி

சென்னை

(1—3—50 புதன்கிழமை)

211.8 மீ. (1,420 கி. சை.)
41.32 மீ. (7,260 கி. சை.)

காலை: 7-15 தமிழில் செய்திகள் 7-30 டி ஜி விசப்பா—வீணை; 8-15 சினிமா பாட்டுகள்; 12-30 தொழிற்சாலைப் பள்ளிகளுக்கு; 1-0 மாதர்நிகழ்ச்சி; 1-50 சினிமா பாட்டுகள்; 2-0 தமிழில் செய்திகள்.

மாலை: 5-30 தத்தோ பந்த் ஸத்தி கர்—பாட்டு; 6-20 கே. ஆர். லட்சுமி—பாட்டு; 7-0 தஞ்சை ஆர். ஆர். பாலசுப்ரமணியம்—பாட்டு; 7-15 தமிழில் செய்திகள்; 7-30 வி சரஸ்வதி — வீணை; 7-45 வடமொழி இலக்கியம்—வி. ர [illegible] வன்—பேச்சு; 8-30 திட்டை கிருஷ்ண அய்யங்கார்—பாட்டு; 10-0 [illegible]

திருச்சி

(1—3—50 புதன்கிழமை)

396.8 மீ (756 கி சை.)

காலை: 7-15 தமிழில் செய்திகள் 7-30 எம். சுலோசனா—பாட்டு; 8-15 எம் வைத்தியநாதன் — பாட்டு; 8-50 நாதஸ்வரம்: 12-30 தொழிற்சாலைப் பள்ளிகளுக்கு; 1-0 கதம்பம்; 1-15 எம். வைத்தியநாதன்—பாட்டு; 2-0 தமிழில் செய்திகள்; 2-10 ஜி என். தண்டபாணி—வீணை.

மாலை: 5-0 கோயமுத்தூர் பி. ஆர். ராமச்சந்திரராவ் — வயலின்; 5-10 இசைப்பயிற்சி; 6-15 புதிய அரசியல் பி. பி. கே. ராஜ சிதம்பரம் — பேச்சு; 6-30 கிராமநிகழ்ச்சிகள்; 7-15 தமிழில் செய்திகள்; 7-45 சென்னையில் உள்ளபடி; 8-0 எம். சுலோசனா — பாட்டு; 8-30 கோயமுத்தூர் பி ஆர். ராமச்சந்திரராவ்—வயலின்; 9 15 காரைக்குடி நடேசய்யர்—பாட்டு, மிருதங்கம்; 9-35 இசைவேளை.

சென்னை மார்க்கெட்

—*—

தங்கம், வெள்ளி

(வியாபார வர்த்தனி)

சென்னை. பிப் 27—

ஸ்டாண்டர்ட் சவரன்	ரூ	76	2	0
தங்கம் ரெடி விலை	ரூ.	17	8	0
மூளை தங்கம்	ரூ.	16	8	0
வெள்ளி ரெடிவிலை	ரூ.	184		
[illegible] (1.ரூபாய் [illegible])		1		

எண்ணெய் மார்க்கெட்

(இடமகு டெலிவரி)

மணிலா எண்ணெய்

(வியாபாரம் நடந்தது)

(500 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு 3 FFA-க்கு கீழ்)

ரெடி	ரூ.	378	0	0
(நிலவரம்)				
மார்ச்	ரூ.	382	0	0
(நாமினல்)				
மார்ச், ஏப்ரல், மே	ரூ.	383	7	0
ஏப்ரல், மே, ஜூன்	ரூ	385	0	0
(விற்பவர்கள்)				

மணிலாப் பயிறு

500 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு	ரூ	188	0	0

விளக்கெண்ணெய்

500 ராத்தல் கொண்ட பாரம் 1-க்கு இடமகு டெலிவரி முதல்-ரகம்	ரூ.	300	0	0

தேங்காய் எண்ணெய்

37 ராத்தல் கொண்ட டின் 1-க்கு கொச்சின், கொயலை	ரூ	39	12	9

சர்க்கரை

வி.ஜ. வி.ப 2-ம்	ரூ.	89	7	5

Edited, Printed and Published by E V R Mani Ammai at the Dravidan Press No. 2. Bala krishna Pillai St. Chintadripet, Madras.